**கட்டான பிரதேச சபை - 2024**
---------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கட்ட்டான பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றம் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கணக்கு, உரித்து மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டான பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுக் நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுக் *நியமங்களுக்கு* இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்க மாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாகவும்.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (I) (ஈ) (iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமத்துடன் தொடர்பான இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | காசுப் பாய்ச்சல் கூற்றைத் தயாரிக்கும் போது நியமத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் 3.28 ஆம் பந்தியின் பிரகாரம் அதன் இணைப்பு 2 இல் EG 6.2 உள்ள விளக்கங்கள் மற்றும் வழிகாட்டுதல்களின் பிரகாரம் , ஆண்டுக்கான செயற்பாட்டு நடவடிக்கைகளிலாலான காசுப் பாய்ச்சல் கணக்கீட்டின் போது மிகை ரூபா 55,176,700 கூடுதலாக காட்டப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் விரிவான வருமான கூற்றில் காட்டப்பட்டிருந்த தேய்மானச் செலவு ரூபா 28,421,246 தொகைக்குப் பதிலாக ரூபா 33,641,841 தொகை கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் மிகைக்கு சீர்செய்யப்பட்ட நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 24,217,274 மற்றும் கடன் வட்டி செலவு ரூபா 1,675,514 ஆகியவை இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், பெறவேண்டியவைகளின் குறைவு ரூபா 21,419,127 ஆக இருக்க வேண்டியதுடன் அது ரூபா 20,697,901 ஆக ஏனைய நடைமுறை | ஏற்றுக்கொள்வதாக | நியமத்திற்கு இணங்க காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பொறுப்புகளின் குறைவு ரூபா 31,589,738 ஆக காணப்பட வேண்டியதுடன் அது ரூபா 30.754,838 எனக் காட்டபட்டிருந்தது. | | |
| (ஆ) | நியமத்தின் 3ஆம் அத்தியாயத்தின் 3.29 ஆம் பந்தியின் படி அதன் இணைப்பு 2 இல் நுபு 6.3 இல் உள்ள விளக்கங்கள் மற்றும் வழிகாட்டுதல்களின் படி முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்களை கணக்கீடு செய்யும் போது, முதலீடுகள் தொடர்பில் பணமாக பெற்ற நிலையான வைப்பு வட்டி ரூபா 24,217,274 தொகை காட்டப்படாததுடன் மீளாய்வாண்டில் நிலையான வைப்புத் தொகை விடுவிக்கப்பட்டதனால் ரூபா 83,100,000 பணத்தொகை உற்பாய்ச்சப்பட்டதுடன் நிலையான வைப்புத் தொடர்பில் ரூபா 242,467,247 தொகை பணம் முதலீடு செய்யப்பட்டதனால் காசு வெளிப்பாய்ச்சலொன்று ஏற்பட்டதுடன் முதலீடாக ரூபா 159,380,920 தொகை மாத்தரமே காசுவெளிப்பாய்ச்சலாக காட்டப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்வதாக | நியமத்திற்கு இணங்க காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | நியமத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் பத்தி 3.2 இன் படி, கையகப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து 03 மாதங்கள் அல்லது அதற்கும் குறைவான முதிர்ச்சியுடன் கூடிய குறுகிய கால பணமுதலீடுகள் மற்றும் பணத்திற்கு சமமான காசுப் பாய்ச்சல்களினுள் காட்டப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 600,100,000 மதிப்புள்ள ஏழு நாள் வைப்புத்தொகைகளின் மதிப்பு காசு மற்றும் காசுக்கு சமமானவையாகக் காட்டப்படவில்லை. | ஏற்றுக்கொள்வதாக | நியமத்திற்கு இணங்க காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | நியமத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் பத்தி 3.30 இன் படி, பின் இணைப்பு 2 இல் EG 6.4 இல் உள்ள விளக்கங்கள் மற்றும் வழிகாட்டுதல் களின் படி நிதி நடவடிக்கை களிலிருந்தான காசுப் பாய்ச்சல்களை கணக்கீட்டின் போது, நீண்ட காலக் கடனுக்கான வட்டி ரூபா 1,265,005 மீளச் செலுத்துதல் காட்டப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக்கொள்வதாக | நியமத்திற்கு இணங்க காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (உ) | நியமத்தின் 6 ஆம் அத்தியாயம் மற்றும் பின்னிணைப்பு 2 இல் EG 3.6 இல் உள்ள விளக்கங்கள் மற்றும் வழிகாட்டுதலின் பிரகாரம் , மீளாய்வாண்டில் 10 வகையான சொத்துக்களுக்குறிய செலவு பெறுமதி ரூபா 3,218,136 தொகை பொருட்களை அகற்றுவதில் ஏற்படும் | ஏற்றுக்கொள்வதாக | நியமத்திற்கு இணங்க காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |

இலாபம் / நட்டத்தைக் கணக்கிடாது செலவு மதிப்பீட்டு பெறுமதி திரட்டப்பட்ட நிதியில் சீர் செய்யப்பட்டிருந்தது.

### 1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் தேதி வரை சபைக்கு கிடைக்கப்பெறாத ரூபா 13,632,835 தொகை மதிப்புள்ள பொருட்கள் கடன் கொடுத்தோராக ரூபா 4,391,055 தொகை மீளாய்வாண்டில் ஒரு செலவாகவும் ரூபா 9,241,780 தொகை நடைமுறை அல்லா சொத்துக்களாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியில் கடன்கொடுத்தோர் மற்றும் நடைமுறைஅல்லா சொத்துக்களின் மீதி மிகையாகவும் மீளாய்வாண்டின் மீதி குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்வதாக | கணக்கை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 17,446,375 ஆனது மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்வதாக | கணக்கை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2023 ஆம் ஆண்டிற்கான நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 3,450,212 தொகை உட்பட மீளாய்வாண்டிற்குறிய பணமாகவுள்ள வட்டி வருமானமான ரூபா 24,217,274 தொகை மீளாய்வாண்டின் வருமானமாக காட்டப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்வதாக | கணக்கை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டு டிசெம்பர் 31 ஆம் திகதியில் கிடைக்க வேண்டிய நிலையான வைப்பு வட்டி ரூபா 20,707,433 தொகை நடைமுறைச் சொத்தாக காட்டப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்வதாக | கணக்கை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2022 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 ஆம் ஆண்டு வரை காணி விற்பனை தொடர்பில் கிடைக்கப்பெற்ற வரி ரூபா 1,000.642 தொகை வருமானமாக சேர்க்கப்பட வேண்டியபோதும் வைப்பாக தடுத்து வைக்கப்பட்டிருந்தது. அதனால் மீளாய்வாண்டில் வருமானம் ரூபா 4,500 மற்றும் திறண்ட நிதி ரூபா 996,142 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்வதாக | கணக்கை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | சபையினால் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் தொடர்பில் சபைக்கு கிடைத்த நிருவாகச் செலவான ரூபா 419,163 தொகை சபையின் வருமானமொன்றாக காட்டப்பட வேண்டிய | ஏற்றுக்கொள்வதாக | கணக்கை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | போதும் அத்தொகை வைப்புக்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | | எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | 2020 ஆம் தொடக்கம் நீதிமன்ற தண்டப்பணமாக கிடைக்கப்பெற்ற ரூபா 170,000 தொகை சபை வருமானமாக கருதப்படாது வைப்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்வதாக | கணக்கை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஏ) | கிம்புலாபிடிய இத்தாகொடல்ல மெண்டிஸ் தோட்ட வீதி புனரமைப்ப தொடர்பில் கிடைக்கப்பெற்ற ரூபா 1,800,000 தொகை மீண்டெலும் மானியமாக விரிவான வருமானக் கூற்றில் காட்டப்பட வேண்டிய போதும் வைப்பாக காட்டப்பட்டிருந்தது. அதனால் அப்பெறுமானத்தினால் மீளாய்வாண்டில் ஏனைய விரிவான வருமானம் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்வதாக | கணக்கை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஐ) | மீளாய்வாண்டினுள் கிடைக்கப்பெற்ற கழியாட்ட வரி ரூபா 322,000 தொகை வைப்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் வருமானம் ரூபா 202,000 இனாலும் திறண்ட நிதி ரூபா 120,000 இனாலும் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்வதாக | கணக்கை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஒ) | புறநகும கேட்போர் கூடத்திற்கு பொறுத்தப்பட்ட பந்தல் அலங்காரத்திற்கு கன்றுகள் நாட்டுவது தொடர்பில் கூட்டுத்தொகை ரூபா 546,000 ஆன செலவுத்தோகை மீளாய்வாண்டில் செலவொன்றாக விரிவான வருமானக் கூற்றில் சீராக்கம் செய்வதற்கு பதிலாக மூலதனமாக்கப்ட்டிருந்தது. | ஏற்றுக்கொள்வதாக | கணக்கை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஓ) | புறநகும கேட்போர்கூட நிர்மாணித்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் ரூபா 97,596,694 ஆன தொகை 2023 ஆம் ஆண்டு நடைமுறை வேலைகளின் கீழ் கணக்கீடு செய்யப்படாது கட்டிடம் என கணக்கீடு செய்தமை மீளாய்வாண்டில் சீர்செய்யப்பட்டிருந்தாலும் 2023 ஆம் ஆண்டில் அதற்காக மேற்கொண்ட தேய்வு பெறுமானம் ரூபா 2,439,917 ஆன தொகை தேய்வு ஒதுக்க கணக்கிலிருந்து நீக்கப்படாதிருந்தது. | ஏற்றுக்கொள்வதாக | கணக்கை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஔ) | மீளாய்வாண்டினுள் மூலதன மானியங்களிலான வருமானமாக ரூபா 1,021,301 தொகை அறியப்பட்டு மூலதனக் கணக்கிள் வரவு வைக்கப்பட்டு சொத்துக்கள் இருப்பு தேய்வு ஒதுக்கக் கணக்கில் செலவு வைக்கப்ட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் தேய்வு ஒதுக்க கணக்கில் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்வதாக | கணக்கை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (க) | மீளாய்வாண்டிற்குறிய 5 வகை சொத்துக்களுக்குரிய தேய்வு மீதி ரூபா 11,943,995 ஆக காணப்பட வேண்டியதுடன் அது ரூபா 12,568,667 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் மேலதிகம் ரூபா 624,672 ஆன தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்வதாக | கணக்கை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (கா) | சொத்துக்கள் அகற்றலின் போது அகற்றப்பட்ட சொத்துக்களுக்குரிய தேய்வினை தேய்வு ஒதுக்க கணக்கிலிருந்த அகற்ற வேண்டியதுடன், அவ்வாறு அகற்றாததன் காரணமாக 08 வகையான சொத்துக்களின் தேய்வு ஒதுக்க கணக்குகளில் ரூபா 829,676 ஆன தொகை அதிகமாக காட்டப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்வதாக | கணக்கை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (கி) | கட்டிட திட்டமிடல் மற்றும் மேற்பார்வை மற்றும் ஆலோசனை கம்பனி தொடர்பிலான செலவுகள் உட்பட மொத்த செலவு ரூபா 96.78 மில்லியனாக கணக்கீடு செய்யும்போது ரூபா 15.38 மில்லியன் கட்டிடங்களக்கு சேர்க்கப்பட்டிருந்ததுடன், மூலதன மாணியமாக சீராக்கம் செய்வதற்கு பதிலாக திறண்ட நிதியத்திற்கு சீர்செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்வதாக | கணக்கை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.3 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் நிதிக் கூற்றுக்களுடன் இணைக்கப்பட்டிருந்த உபஆவணங்களின் கூட்டுத்தொகை மற்றும் நிதி கூற்றுக்களில் 03 கணக்குகளின் கூட்டுத் தொகை மீதிகளுக்கிடையில் ரூபா 68,131,387 ஆன தொகை வேறுபட்டு காணப்பட்டது. | ஏற்றுக்கொள்வதாக. | வேறுபாட்டிற்கான காரணங்களைக் கண்டறிந்து சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழெ காட்டப்பட்டுள்ளன. .

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணம் 571 | இரண்டு வருடங்களைக் கடந்த ரூபா 9,880,318 ஆன வைப்புக்கள் விடுவிக்கப்பட்டிருக்கவில்லை | எதிர்வரும் காலங்களில் சபை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா . 171,228,358 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 122,351,582 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2..1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன

| | | 2024 | | | | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப்ப ட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்ப ட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| | | 000’ | 000’ | 000’ | 000’ | 000’ | 000’ | 000’ | 000’ |
| (i) | வீதவரியும் வரியும் | 51,410 | 62,336 | 58,930 | 35,018 | 42,901 | 75,610 | 77,501 | 32,458 |
| (ii) | வாடகை | 10,507 | 887 | 878 | 8 | 3,531 | 794 | 764 | 209 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங் கள் | 2,460 | 2,742 | 2,742 | - | 2,472 | 3,046 | 3,046 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 207,136 | 283,435 | 283,435 | - | 181,974 | 263,867 | 263,867 | - |
| | மொத்தம் | 271,513 | 349,400 | 345,985 | 35,026 | 230,878 | 343,317 | 345,178 | 32,667 |

#### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த வருமானத்தில் 129% பட்டியலிடப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டின் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த வருமானத்தில் 148மு பட்டியலடப்பட்டிருந்தது. | காணி விற்பனை வரி வருமானம் அதிகரித்துள்ளதாக. | யதார்த்தமான மதிப்பீடுகளைத் தயாரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதனப்படையில் மொத்த வருமானத்தை மதிப்பீடு செய்தல் யதார்த்தமற்றது. | | |
| (ஆ) | மீளாய்வாண்டில் இறுதி தினத்தில் வரி நிலுவைத் தொகை ரூபா 31,769,071 ஆக இருந்ததுடன், அது 2024 ஆம் ஆண்டின் பட்டியல் பெறுமதியின் 69மூ ஆகும். ஆந்தப்பெறுமதியில் 02 வருடங்களுக்கும் மேலாக நிலுவையில் இருந்த தொகை ரூபா 20,953,049 ஆகும். இது மொத்த வரி நிலுவைத் தொகையில் 66மூ ஆாகும். அதன் பிரகாரம் , சபையினால் வரி வசூலிப்பு மிகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | 2024 வரையிலான நிலுவையில் உள்ள வரிகளை அறவிட சொத்துக்களை முடக்கி நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவைத் வரித் தொகையை வசூலிக்க திறமையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

பிரசே சபைகள் கட்டளைச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுது போக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் கழிவகற்றல் தொடர்பாக மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய சுற்றாடல் அனுமதிப்பத்திரம் 2024 ஜுன் 9 ஆந் திகதி காலாவதியானதுடன், மேலும் மே 29, 2025 ஆந் திகதி, வரை சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றாடல் அனுமதி பத்திரத்தை பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக. | சுற்றாடல் அனுமதியை குறிப்பிட்ட நேரத்திற்குள் பெற்றுக்கொள்ள வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 5,995,000 பெறுமதி அலுவலக நடவடிக்கைகளை கணினி மயமாக்குவதற்காக கொள்வனவு செய்யப்பட்ட மென்பொருளின் இறுதியாக நிர்வாக அதிகாரத்தை சுதந்திரம் கொள்வனவு சபைக்கு வழங்கப்படாததுடன் வழங்குனர்களுக்கு எந்த இடத்திலிருந்தும் கணினியை அணுகி அதன் தரவை மாற்றும் திறனைக் கொண்டிருந்தமை தெறியவந்தது. அதன் பிரகாரம் , சபையின் நிதி பரிவர்த்தனைகளுக்காக பயன்படுத்தப்படும் அமைப்பின் இறுதி நிர்வாக அதிகாரம் வெளிப்புற தரப்பினருக்கு வழங்கப்படுவதனால் நிதி பரிவர்த்தனைகளின் ரகசியத்தன்மை | மென்பொருளின் நிர்வாகம் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக சேவை வழங்குனரால் நிர்வகிக்கப்படுவதாக. | நிருவாக அதிகாரத்தினை வெளியாருக்கு வழங்கியிருப்பதானது நிதி கொடுக்கல் வாங்கள் தொடர்பான பாதுகாப்பு மற்றும் இரகசியத் தன்மை தொடர்பில் சபையானது கருத்திற் கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் பாதுகாப்பு தொடர்பிர் கணக்காவிற்கு திருப்தி அடைய முடியாது. | | |
| (ஆ) | **வீதி விளக்குகளைப் பொருத்துதல்,** பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் | | |
| (i) | சபையினால் பெறப்பட்ட புகார்களுக்கு புகார் எண்கள் வழங்கப்படாமையினால் அவற்றை பின்தொடர்தல் சிக்கலானதாகவும், தெருவிளக்குகள் பொருத்துவதற்கான கோரிக்கைகள் தொடர்பான பதிவேடுகள் பராமரிக்கப்படாமலும் காணப்பட்டது. | முறைப்பாட்டு இலக்கங்கள் வழங்கப்பட்டு, பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | முறைப்பாடுகளுக்கு இலக்கங்கள் வழங்கப்பட வேண்டியதுடன் புதிய பொருத்துதல் களுக்கு பதிவேடொன்றும் பேணப்படல் வேண்டும். |
| (ii) | மின் கம்பங்களுக்கு எண்ணிடுவது தொடர்பான கால அளவு, ஏற்படும் செலவு, நியமிக்கப்பட வேண்டிய அதிகாரிகளின் எண்ணிக்கை போன்ற தகவல்களை உள்ளடக்கிய பணித் திட்டத்தைத் தயாரிக்காமல் தொடங்கப்பட்ட திட்டமொன்றினால் சபையின் வளங்களை முறையற்ற முறையில் பயன்படுத்தப்பட்டும், வளங்களை வீணாக்கப்பட்டும் இருந்ததுடன் எதிர்பார்த்த பெறுபேறுகளை அடைய முடியாமலும் இருந்தது. | ஏதிர்பார்த்த பெறுபேற்றை அடைய முடியவில்லையென. | திட்டமிட்ட முறையாக செய்யப்பட வேண்டும். |
| (இ) | 2021 ஆம் ஆண்டில் 7 திட்டங்கள் தொடர்பில் பெற வேண்டிய ரூபா 74,825 நிலுவைத் தொகையை பெற்றுக் கொள்வதற்கோ அல்லது பெறப்படவில்லையாயின் அது தொடர்பில் உறுதிப்படுத்தப்பட்டு அவற்றை புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிலுவைகள் உறுதிப்படுத்தப்பட்டு , அவற்றை பதிவேடுகளில் இருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக.. | பெறவேண்டிய நிலுவைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரை மொத்தம் ரூபா 58,471,695 நிர்மாணத்துறை கடன் கொடுத்தோர் நிலுவைகளைத் தீர்க்கவோ அல்லது அவற்றைத் தீர்க்க முடியாவிட்டால், அவற்றை உறுதிப்படுத்தி பதிவழிக்கவோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் அவற்றைப் பதிவழிக்க நடவடிக்கை எடுப்பதாக. | கடன் கொடுத்தோர் மீதிகள் தீர்க்கப்படல் வேண்டும். |
| (உ) | ஒவ்வொரு பொருளுக்கும் பினஅட்டைகள் முறைமை பேணப்பட வேண்டியதுடன் எந்தவொரு பொருளுக்கும் சபையானது பின்அட்டையைப் பராமரித்திருக்கவில்லை | எதிர்காலத்தில் சரி செய்யப்படுவதாக. | ஒவ்வொரு பொருளுக்கும் இருப்பு கட்டுப்பாட்டுக்குத் தேவையான பின் அட்டைகளை பராமரிக்கப்படல் வேண்டும். |

## 3.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அலுவலகப் பணிகளை கணினிமயமாக்குவதற்கான மென்பொருள் அமைப்பை கொள்வனவு செய்வதற்கு ஏலம் சமர்ப்பித்த ஒரே நிறுவனம் சமர்ப்பித்த ரூபா 5,995,000 விலையினை ஏற்றுக்கொள்ள தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு பரிந்துரைத்திருந்தது, ஆனால் அது விலைமனுக்கோரல் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படவில்லை. அதேபோல், அரசு கொள்முதல் வழிகாட்டுதல்களின் 4.2.2 (அ) இன் பிரகாரம் கொள்முதல் அட்டவணை தயாரிக்கப்படவில்லை, மேலும் கொள்வனவு வழிகாட்டுதல்களின் 2.3.2 (இ), 2.11.2, 2.12 (அ), 2.11.3 (அ), 4.3.1 (அ), 7.9.1 மற்றும் 9.7.2 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தற்போது கொள்வனவு வழிகாட்டுதல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக. | தேசிய கொள்வனவு வழிகாட்டுதல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |